# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப் பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| தரம்: 10 | தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் I<br>Information & Communication Technology I | நேரம்:<br>3 மணித்தியாலம் |
| சுட்டெண்: .............................. | 80 T I | மேலதிக வாசிப்பு நேரம்:<br>10 நிமிடங்கள் |

**கவனிக்க:**

- எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1(, (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

1. பகுப்பாய்வுப் பொறியைக் கண்டறிந்தவர்
   (1) பிளேஸ் பஸ்கால் (Blaise Pascal) (2) சார்ள்ஸ் பாபேஜ் (Charles Babbage)
   (3) ஹோவாட் ஐகென் (Howard Aiken) (4) ஹேமன் கொலெரித் (Herman Hollerith)
2. திரான்சிற்றர்கள் ஒருங்கிணைந்த சுற்றுக்களால் மாற்றீடு செய்யப்படும் போது கணினியின் பின்வரும் எப் பண்புகள் குறைவடைந்தன?
   (1) வேகம், பருமன் (2) வேகம், கொள்ளளவு
   (3) மின் நுகர்ச்சி, பருமன் (4) வேகம், விலை
3. பின்வரும் எச் சாதனம் x - கதிர்களைப் பயன்படுத்தி மனித உடலின் உட்பாகங்களை வருடும்?
   (1) MRI (2) CT (3) ECG (4) EEG
4. பின்வருவனவற்றில் தரவு அல்லாதது யாது?
   (1) குடும்பம் ஒன்றிலுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை
   (2) இன்று 100 மாணவர்கள் பாடசாலைக்குச் சமூகமளிக்கவில்லை
   (3) மாணவன் ஒருவன் பெற்றுக்கொண்ட புள்ளிகள்
   (4) ஒவ்வொரு நாளும் 10% ஆன மாணவர்கள் பாடசாலைக்குச் சமூகமளிப்பதில்லை
5. பின்வரும் எக் கணினித் தலைமுறையில் EDVAC கணினிகள் பயன்படுத்தப்பட்டன?
   (1) 1ம் தலைமுறை (2) 2ம் தலைமுறை (3) 3ம் தலைமுறை (4) 4ம் தலைமுறை
6. பின்வருவனவற்றில் வெளியீட்டுச் சாதனம் யாது?
   (1) இயக்குபிடி (2) நுணுக்குப்பன்னி (3) வரைவி (4) தொடுநிரப்பிடம்
7. வன்தட்டின் எப்பாகத்தில் தரவுகள் சேமிக்கப்படும்?
   (1) தலை (2) தூண்டிப் புயம் (3) நினைவகத்தட்டு (4) சுழல் தண்டு
8. பின்வரும் எத் துறை கணினியைக் கணினித் திரையுடன் தொடுப்பதற்குப் பயன்படுத்த முடியாது?
   (1) VGA (2) DVI (3) HDMI (4) PS/2
9. பின்வருவனவற்றில் அழிதகா நினைவகம் யாது?
   (1) தற்போக்குப் பெறுவழி நினைவகம் (2) வாசிப்பு மட்டும் நினைவகம்
   (3) பதுக்கு நினைவகம் (4) நினைவகப் பதிவகங்கள்

10. இரு வேறு கணினி வலையமைப்புக்களை ஒன்றாகத் தொடுப்பதற்கு ………………….. பயன்படுத்தப்படுகின்றது.

(1) வலையமைப்பு ஆளி (2) வலையமைப்பு இடைமுக அட்டை

(3) வழிப்படுத்தி (4) தீச்சுவர்

11. புகைப்படங்கள், பரீட்சை வினாத்தாள்கள் போன்றவற்றை வருடி அவற்றைக் கணினிக்கு உள்ளீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படுபவை.

(1) ஒளியியல் குறி கண்டறிதல் (2) காந்த மை வரியுரு வாசிப்பான்

(3) சமதளப்படுகை வருடி (4) பட்டைக்குறிமுறை வாசிப்பான்

12. ஓத்திசை தொலைபேசி இணைப்பினூடாக இலக்கமுறைத் தரவுகளை ஊடுகடத்துவதற்காக அவற்றை ஒத்திசைத் தரவுகளாக மாற்றும் சாதனம் யாது?

(1) வலையமைப்பு ஆளி (2) வலையமைப்பு இடைமுக அட்டை

(3) மோடெம் (4) தீச்சுவர்

13. பின்வருவனவற்றில் எது உடு வடிவ இடத்தியலின் நன்மை அன்று?

(1) வலையமைப்பு சார் வழுக்களை இலகுவில் இனங்கண்டு சீராக்கலாம்

(2) அதிக வடங்கள் தேவைப்படும்

(3) வலையமைப்பினை விரிதாக்கலாம்

(4) ஒரு கணினியின் செயலிழப்பானது வலையமைப்பின் தொழிற்பாடுகளைப் பாதிக்கும்

14. மீனா தனது வீட்டில் 3 **நாய்களையும்** மற்றும் **அழகான பூனைகளையும்** வைத்திருக்கின்றாள். தடித்த எழுத்துக்களால் குறிப்பிடப்பட்ட சொற்கள் குறித்து நிற்கும் தரவுகளின் வகைகள் முறையே.

(1) அளவுசார், பண்புசார் (2) பண்புசார், அளவுசார்

(3) அளவுசார் மாத்திரம் (4) பண்புசார் மாத்திரம்

15. குறியீட்டு முறைமையில் இரும் எண் $1100111_2$ ஆனது எழுத்து 'g' இனை வகைகுறிக்குமாயின், பதின்ம எண் 107 இனால் வகைகுறிக்கப்படும் எழுத்து யாது?

(1) j (2) i (3) k (4) h

16. பின்வருவனவற்றில் எது வலிதற்ற BCD குறிமுறையாகும்?

(1) 1001 (2) 0111 (3) 1010 (4) 0010

17. பின்வருவனவற்றில் $56_{10}$ இற்குச் சமவலுவானது யாது?

(1) $11000_2$ (2) $111001_2$ (3) $101000_2$ (4) $111000_2$

18. எண்ம எண் $625_8$ இற்குச் சமனான இரும எண் பின்வருவனவற்றில் எது?

(1) $110010100_2$ (2) $110010101_2$ (3) $110000111_2$ (4) $111010101_2$

19. பின்வரும் எண்களில் பெரிய எண் யாது?

(1) 135 (2) $10000010_2$ (3) $215_8$ (4) $6D_{16}$

20. EBCDIC குறியீட்டு முறைமையில் பிரதிநிதித்துவம் செய்யப்படக்கூடிய எழுத்துக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 256 (2) 128 (3) $2^{128}$ (4) $2^{16}$


21. பின்வருவனவற்றில் எது பருமனில் பெரிய கோப்பாகும்?

(1) $2^{32}$byte (2) $2^{20}$ KB (3) 10000 Byte (4) $2^{11}$MB

22. பூலியன் கோவை NOT(NOT A AND NOT B) இற்குச் சமவலுவானது பின்வருவனவற்றில் எது?


(1) $\overline{\overline{A.B}}$ (2) $\overline{\overline{A}+\overline{B}}$ (3) $\overline{\overline{A}.B}$ (4) $\overline{A}.\overline{B}$

23. பின்வரும் தர்க்க வாயில்களில் எது தரப்பட்டுள்ள தர்க்கச் சுற்றுக்குச் சமவலுவானதாகும்?




(1) NOT (2) AND (3) OR (4) NAND

24. வெளியீடு X=1 எனின், உள்ளீடுகள் A, B, C ஆகியவவை கொண்டிருக்கக்கூடிய பூலியன் பெறுமானங்கள் முறையே யாவை?





(1) A=0, B=1, C=1 (2) A=1, B=1, C=1 (3) A=1, B=1, C=0 (4) A=0, B=0, C=1

25. ஒரு வினாத்தாள் நான்கு வினாக்களைக் கொண்டுள்ளது. மாணவர்கள் அவற்றிலிருந்து மூன்று வினாக்களைத் தெரிவுசெய்து விடையளிக்க வேண்டும். வினா 1 (Q1) மற்றும் வினா 4 (Q4) ஆகியவை கட்டாய வினாக்களாகும். மாணவர்கள் மூன்றாவது வினாவாக வினா 2 (Q2) , வினா 3 (Q3) ஆகியவற்றில் ஒன்றைத் தெரிவு செய்யலாம்.
மேற்படி சூழ்நிலையைச் சரியாக விபரிப்பது பின்வரும் எக் கோவையாகும்?
(1) Q1 AND Q2 AND (Q3 OR Q4) (2) (Q2 OR Q3) AND (Q1 OR Q4)
(3) Q2 AND Q3 AND (Q1 OR Q4) (4) (Q2 OR Q3) AND Q1 AND Q4


26. பூலியன் இயற்கணிதத்தில் (1+1).(1+0) என்னும் கோவையின் வெளியீட்டுப் பெறுமானம் யாது?
(1) 2 (2) 0 (3) 1 (4) 3

27. தரப்பட்டுள்ள உருவில் நிழற்றப்பட்டுள்ள பிரதேசம் குறித்து நிற்கும் தர்க்க வாயில் யாது?



(1) NOR (2) AND (3) OR (4) NAND

28. வெளியீடு D=1 எனின், உள்ளீடுகள் A, B, C ஆகியவவை கொண்டிருக்கக்கூடிய பூலியன் பெறுமானங்கள் முறையே யாவை?




(1) A=0, B=0, C=0 (2) A=1, B=1, C=0 (3) A=1, B=1, C=1 (4) A=1, B=0, C=0

29. பின்வருவனவற்றில் பணிசெயல் முறைமை அல்லாதது யாது?
(1) Ubuntu (2) Macintosh (3) iOS (4) Ms word

30. பின்வரும் தொழிற்பாடுகளைக் கருதுக:
(A) கோப்புக்களையும், கோப்புறைகளையும் முகாமை செய்தல்
(B) உள்ளீட்டுச் சாதனங்களை முகாமை செய்தல்
(C) பாதுகாப்பு வழங்குதல்
மேலுள்ளவற்றில் எது / எவை பணிசெயல் முறைமையின் தொழிற்பாடு / தொழிற்பாடுகளாகும்?
(1) A மாத்திரம் (2) A, B மாத்திரம் (3) B,C மாத்திரம் (4) A, B, C எல்லாம்

31. கணினியின் வினைத்திறனை உயர்த்துவதனூடாக கணினியைப் பராமரிக்கும் மென்பொருள் யாது?
(1) மொழிபெயர்ப்பி (2) சாதன செலுத்தி
(3) பயன்பாட்டு மென்பொருள் (4) விரிதாள் மென்பொருள்

32. பின்வருவனவற்றில் எது தனிப் பயனர் தனிப்பணி பணிசெயல் முறைமை ஆகும்?
(1) Windows 7 (2) Macintosh (3) Ms DOS (4) Ubuntu

33. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக:

(A) வட்டு வடிவமைப்பானது தேக்கச் சாதனமொன்றைத் தரவுகளைச் சேமிப்பதற்கேற்ற வகையில் தயார் செய்யும் செயற்பாடாகும்

(B) துண்டமாக்கப்பட்ட கோப்புக்களை மீள ஒழுங்குபடுத்துவதற்கு வட்டு மீள்துண்டாக்கல் (Disk defragmentation) உதவுகிறது

(C) வட்டு பிரிவிடலானது தனியொரு வட்டினைப் பல தர்க்கவியல் பாகங்களாகப் பரிக்கின்றது

மேலுள்ள கூற்றுக்களில் சரியானவை யாவை?

(1) A, B மாத்திரம் (2) A, C மாத்திரம் (3) B,C மாத்திரம் (4) A, B, C எல்லாம்


34. பின்வருவனவற்றில் முறைமை மென்பொருள் அல்லாதது யாது?

(1) பணிசெயல் முறைமை (2) மொழிமாற்றிகள்
(3) சொல் முறைவழிப்படுத்தல் (4) பயன்பாட்டு மென்பொருள்

35. Ms word மென்பொருள் கோப்பின் கோப்பு நீட்சி யாது?

(1) exe (2) pptx (3) docx (4) txt


36. பின்வரும் வரைபில் A, B ஆகியன உள்ளீடுகளாகவும் X வெளியீடாகவும் காணப்படுகின்றன.




பின்வரும் எக் கோவை வெளியீடு X இற்காகப் பெற்றுக்கொள்ளப்படும்?

(1) A.B (2) A+B (3) $\overline{A.B}$ (4) $\overline{A+B}$

37. முகப்படையாளங்கள் A, B ஆகியவற்றால் காட்டப்படுபவை முறையே




(1) Superscript, increase font (2) Superscript, Subscript
(3) Subscript, decrease font (4) Subscript, Superscript

38. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளில் மத்தியில் நேர்ப்படுத்தலுக்குரிய குறுக்குவழிச் சாவி யாது?

(1) Ctrl + C (2) Ctrl + A (3) Ctrl + E (4) Ctrl + R

39. பின்வரும் சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருட்களில் எதனை முகில் கணினிகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்?

(1) Ms word (2) Open office writer (3) Google docs (4) Libre office writer

40. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருட்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A) எழுத்துருக்களை வெவ்வேறு அளவுகளிலும் பாணிகளிலும் (styles) வடிவமைக்கலாம்.

B) பக்கத்தினுள் வாசகங்களையும் உருவங்களையும் சேர்ப்பதற்கு இது அனுமதிக்கின்றது.

C) பக்கத்தினுள் அசைவூட்டல்களைச் சேர்ப்பதற்கு இது அனுமதிக்கின்றது

மேலுள்ளவற்றில் சரியானது / சரியானவை?

(1) A மாத்திரம் (2) A, B மாத்திரம் (3) A,C மாத்திரம் (4) A, B, C எல்லாம்